பாடம் 2

# 2. விலங்கின நண்பர்

**வாசிப்போம்**

**தொடக்கநூல் 1: 20 - 25**

மாணவர்களே! நீங்கள் விலங்கியல் பூங்காவிற்கு சென்று இருப்பீர்கள் அல்லது வில்பத்து, யாலை போன்ற விலங்குச் சரணாலயங்களுக்குச் சென்றிருக்கலாம். அங்கே பல இன விலங்குகள், பறவைகள், ஊர்வன, மீன் இனங்கள், பூச்சிகள் யாவற்றையும் பார்த்துப் பரவசப்பட்டிருப்பீர்கள்.

விலங்கு உலகம் மிகவும் அழகுமிக்கதாகும். கடவுள் இவ்விலங்குகளைப் படைத்தார். விலங்குகள் வாழ்வதற்குப் பொருத்தமான சூழலைப் புவியிலே கடவுள் தோற்றுவித்தார்.

## நீர்வாழ், வான்வாழ் உயிரினங்களின் படைப்பு



கடவுள், “திரளான உயிரினங்களை தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்தின் மேலே பறவைகள் பறப்பனவாக” என்றார். தொடக்கநூல் 1:20





படைப்பின் ஐந்தாவது தினத்திலே, கடவுள் நீர் வாழ் உயிரினங்களைப் படைத்தார். பவளப்பாறைகளைத் தோற்றுவிக்கும் அங்கிகள் தொடக்கம் பல நிறங்களில் அழகாக நீந்தித் திரியும் சிறிய, பெரிய மீன்களையும், திருப்பாடலில் காணப்படும் லெவியாதான் எனும் பெரிய திமிங்கில இனத்தையும் கடவுள் அற்புதமாகப் படைத்தார். நீல வானிலே சுதந்திரமாகப் பறந்து திரியும் பல வர்ண பறவைகளை கடவுள் படைத்தார்.

## கால்நடை, ஊர்வன, காட்டு விலங்குகள்

**வாசிப்போம் தொடக்கநூல்**

கடவுள், “கால்நடைகள், ஊர்வன காட்டு விலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக” என்றார், **1: 24**





கடவுள் , கால் நடைகள் ஊர்வன, காட்டு விலங்குகளைப் படைப்பின் ஆறாவது தினத்திலே இனம் இனமாகப் படைத்தார். கடவுள் தான் படைத்த விலங்கு உலகம் நல்லது எனக் கண்டார். படைப்புகள் அனைத்தும் மனுக்குலம் தன் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்ல உறுதுணையாக இருக்கின்றன.

## பிரயாணிகள் காட்டும் நற்பண்புகளின் முன்மாதிரி

பிரயாணிகள் காட்டும் நற்பண்புகள், கடவுளின் அன்பினதும் ஆற்றலினதும் வெளிப்பாடாகும்.

பூச்சி இனத்தைச் சேர்ந்த எறும்பு, தேனீக்கள் வண்ணத்துப்பூச்சி , சிலந்தி ஆகியற்றையும் மற்றும் பறவைகள், விலங்குகளையும் அவதானித்திருக்கிறீர்களா? இவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய நற்பண்புகளை அறிவோம்.



### தேனீ

சுறுசுறுப்பு

ஒற்றுமையான கூட்டு வாழ்க்கை

வேலைப்பகிர்வு

### பறவைகள், குருவிகள்

ஆண், பெண் குருவிகள் இணைந்து கூடு கட்டல்.

ஒற்றுமையான குடும்ப வாழ்க்கை

இரைதேடிக்கொடுத்து, குஞ்சுகளை அன்புடன் பராமரித்தல்.





### காகம்

துன்ப, துயரநேரத்திலும், ஆபத்து வேளையிலும் ஒன்றிணைதல்

ஆபத்தை அறிந்து எச்சரித்தல்

மற்றைய காகங்களை அழைத்து உணவைப்பகிர்ந்து உண்ணல்.



**எறும்பு**


நீதி 6: 6-8

ஒழுங்குமுறையில் செல்லல்.

ஒற்றுமையான
கூட்டு வாழ்க்கை

சுறுசுறுப்பு
சேமிப்பு

காலம் அறிந்து
செயற்படல்




**நாய்**

கீழ்ப்படிவு

விசுவாசம்

நன்றியுணர்வு







**சிலந்தி**

விடா முயற்சி

நுண்ணிய
வேலைத்திறன்

பொறுமை

**பூனை**

சுத்தத்தை
விரும்புதல்

எங்கு சென்றாலும்
குட்டியையும் எடுத்துச்
சென்று தாயன்பைக்
காட்டல்.


**எருது**

கடின உழைப்பு

நீதிமொழிகள் 14:4

விலங்குகள் காட்டும் நற்பண்புகள் மூலம் மானிடர் குறித்து கடவுளின் விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் அறிந்துகொள்ளலாம்.

## கடவுள் மானிடரில் எதிர்பார்க்கும் குணநலன்கள்




பின்வரும் விலங்குகளிலிருந்து, கடவுள் உங்களிடம் எதிர்பார்க்கும் நற்பண்புகளை அட்டவணையை நிரப்புவதன் மூலம் கண்டறியுங்கள்.

| விலங்குகள் | நம்மிடம் கடவுள் எதிர்பார்க்கும் நற்பண்பு |
|---|---|
| எருது - நீதி - 14:4 | |
| நாய் | |
| எறும்பு நீதி 6: 6-8 | |
| தேனீ | |
| பசுவும் கன்றும் | |
| புறா | |

## விலங்குகள் மூலம் கடவுள் மனுக்குலத்தைப் பராமரிக்கிறார்

விலங்குகளில் இருந்து மனிதன் தன் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்கிறான். உணவு, உடை போன்றவற்றைப் பெறவும், போக்குவரத்து செய்யவும், பல வேலைகளை எளிதாகச் செய்யவும் விலங்குகள் உதவுகின்றன.

| விலங்குகள் | நாம் பெறும் பயன்கள் |
|---|---|
| தேனீ, வண்ணத்துப்பூச்சி | தேனைச் சேர்த்து தருவதுடன், மகரந்த சேர்க்கையைத் தாவரங்களில் நிகழ்த்துதல். |
| காகம் | அழுக்குகளை அகற்றுதல். |
| நாய் | வீட்டைக் காக்கின்றது, விழிப்புலன் இழந்தோருக்கு வழிகாட்டி உதவுதல். |
| மண்புழு | மண்ணை வளமாக்குதல். |
| ஆடு | இறைச்சி, பால் |
| பசு | பால் |
| கோழி | முட்டை, இறைச்சி, |
| எருது | வயல் உழுவதற்கு |
| ஒட்டகம் | பாலைவனப் பிரயாணம் |
| யானை | பாரமான பொருட்களைத் தூக்குதல் |
| செம்மறி ஆடு, | கம்பளி உடை |
| பட்டுப் பூச்சி | பட்டு |

விலங்குகளின் முன்மாதிரியையும் பயன்களையும் அனுபவிக்கும் நாம், அவற்றை பொறுப்போடு பராமாரிக்க கடமைப்பட்டுள்ளோம். உயிரினங்களைக் கீழ்ப்படுத்தி, ஆண்டு கொள்ளுங்கள் (தொ.நூ. 1:28) என மாந்தரிடம் கடவுள் கூறியது, பொறுப்புடன் ஆண்டுகொள்ளுங்கள் எனும் பொருளிலேயே. யானை, காண்டா மிருகம் போன்ற மிகவும் அரிதான விலங்குகளை அதன் விலையுயர்ந்த தந்தங்களை களவாடும் பொருட்டு கொலை செய்வதன் மூலம் மிகப் பெரியவோர் இன அழிவுக்கு வழி காட்டுவது பொறுப்பான செயலன்று.

ஆண்டவர் இயேசு இவ்வுலகப் பணியை ஆரம்பிக்கும் முன் நாற்பது நாட்கள் பாலை நிலத்தில் காட்டு மிருகங்களின் மத்தியில் சஞ்சரித்தமை, நமக்கு ஓர் முன்மாதிரியாக அமைகிறது. நாம் விலங்குகளுக்கு இரக்கம் காட்டி பராமரித்து பாதுகாப்பு வழங்குவோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- 'ஜீவ காருண்ய சங்கம்' என்னும் விலங்குகள் மீது அன்பு, இரக்கம் காட்டும் அமைப்பு பல நாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.
- விலங்குகளைப் பாதுகாக்கும் சட்டங்களும், கடும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படுகின்றன.

## சிந்திப்போம்

- கடவுள் விலங்கின உலகைப் படைத்தார்.
- விலங்குகளிடம் நற்பண்புகள் காணப்படுகின்றன. அவற்றை நாம் முன்மாதிரியாக்கலாம்.
- விலங்குகளின் நற்பண்புகள் கடவுளின் அன்புக்கும் ஆற்றலுக்கும் சான்று பகர்கின்றன.
- விலங்குகளின் நற்பண்புகளின் மூலம் கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் குணநலங்களை அறியலாம்.
- விலங்குகளை பாதுகாத்து பராமரிப்பது நமது பொறுப்பாகும்.

## செயற்பாடு

1. திருவிவிலியத்தில் பல சம்பவங்கள் விலங்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. குழுவாகச் சேர்ந்து கீழே தரப்பட்டுள்ள திருவிவிலிய பகுதிகளை வாசித்து அட்டவணையைப் பூர்த்தியாக்குக.

| திருவிவிலியப் பகுதி | தொடர்புடைய விலங்கு | சம்பவம் |
|---|---|---|
| 1 லூாக்கா 3:22 | | |
| 2. லூாக்கா 19:30 | | |
| 3. தொடக்கநூல் 3:1 | | |
| 4. 1 அரசர்கள் 17:4 | | |
| 5. தொடக்கநூல் 8:10 | | |

2. விலங்குகளை அழிக்கும் செயல்பாடுகளையும் அவற்றை தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும், குழு நிலையில் ஆராய்ந்து பின்வரும் அட்டவணையைப் பூர்த்தியாக்குக.

| விலங்குகளை அழிக்கும் மனிதச் செயற்பாடு | தடுக்கும் முறைகள் |
|---|---|
| 1. பாதுகாக்கப்பட்ட விலங்குகளை வேட்டையாடுதல் | சரணாலயம் அமைத்து பாதுகாத்தல் |
| | |
| | |